TNTP120000692021

Presented on : 15-03-2021
Registered on : 15-03-2021
Decided on : 21-07-2026
Duration : 5 years, 4 months, 6 days

மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், துறையூர்
முன்னிலை. திரு தி.அன்பு, பி.ஏ., பி.எல்.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி
2026 ம் ஆண்டு ஜுலை திங்கள் 21 ம் நாள் செவ்வாய் கிழமை

**<u>அசல் வழக்கு எண்.55/2021</u>**

ராஜா .. வாதி

/எதிர்/

வீரம்மாள் .. பிரதிவாதி

இவ்வழக்கானது, என்முன்பாக 08.06.2026 ம் தேதியில் இறுதி விசாரணைக்காக வந்தபோது வாதிக்காக கற்றறிந்த வழக்கறிஞர் திரு எஸ்.முத்துகுமார் அவர்கள் ஆஜராகியும், பிரதிவாதியை அழைத்தும் ஆஜரில்லாமல் தோன்றாத்தரப்பினராக்கப்பட்டும், வாதி தரப்பு சாட்சியம் மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள்வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

**<u>தீர்ப்புரை</u>**

தாவாச்சொத்துக்களைப் பொருத்து வாதியை மோசடி செய்யும் எண்ணத்துடன் பிரதிவாதி 13.04.2015 ம் தேதியில் ஒருதலைப்பட்சமாக ஏற்படுத்தியுள்ள செட்டில்மெண்ட் ரத்து ஆவணமானது ( 2658/2015) சட்டப்படி செல்லத்தக்கதல்ல, புகலானது (Null and void) வாதியை எவ்வகையிலும் கட்டுப்படுத்தக்கூடியதல்ல, நீக்கரவு செய்யவேண்டியது என்று விளம்புகை செய்யக்கோரி இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

T Anbu

Digitally signed by T Anbu
Date: 2026.07.21 18:59:50 +0530

2. **<u>வாதி தாக்கல் செய்துள்ள வழக்குரையின் சுருக்கம்</u>**

பிரதிவாதியின் மகன் வாதி ஆவார். பிரதிவாதியின் தகப்பனார் நல்லுகவுண்டர் தாவாச்சொத்துக்களை பிரதிவாதிக்கு கடந்த 17.05.1993 ம் தேதியில் ஒரு இனாம்சாசனம் எழுதி வைத்தன் படிக்கு பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டு, அவரது அனுபோகத்திலும், சுவாதீனத்திலும் இருந்து வந்த சொத்தினை பிரதிவாதி, வாதிக்கு 28.02.2011 ம் தேதியில் ஒரு செட்டில்மெண்ட் மூலம் சுவாதீனமும் ஒப்படைத்துள்ளார். வாதி செட்டில்மெண்ட் நாள் முதல் தாவாச்சொத்துக்களை யாவருமறிய நிராட்சேபணையாக அடைந்து ஆண்டு அனுபோகமும் செய்து கொண்டு வருகிறார். பிரதிவாதி, வாதிக்கு எழுதி வைத்த ஆவணம் செட்டில்மெண்ட் பத்திரம் என்பதால் அதில் கண்டுள்ள உயில் வாசகங்கள் மேற்படி செட்டில்மெண்ட் பத்திரத்திற்கு சட்டப்படி பொருந்தாது. வாதிக்கு, பிரதிவாதி செட்டில்மெண்ட் தேதியில் தாவாச்சொத்துக்களின் சுவாதீனத்தினை ஒப்படைத்துவிட்டபடியால் தாவாச்சொத்துக்ளில் பிரதிவாதிக்கு அதில் உரிமை கோருவதற்கு சட்டப்படி எவ்வித வழிவகையும் இல்லை என்று சென்னை உயர்நீதிமன்றமும் பல்வேறு தீர்ப்புகளை வழங்கியுள்ளது.

3. தாவாச்சொத்துக்கள் செட்டில்மெண்ட் ஏற்பட்ட நாள் முதல் வாதியின் அனுபோகத்திலிருந்து வருவதை அனுசரித்து வருவாய்த்துறையினரும் வாதியின் பெயருக்கு பட்டா வழங்கியுள்ளனர். இந்நிலையில் கடந்த 21.07.2020 ம் தேதியில் வாதிக்கு தனி மாவட்ட வருவாய் அலுவலர் அவர்கள் நான்குவழி சாலை அமைக்க தாவாச்சொத்தின் ஒரு பகுதியினை அரசு நில எடுப்புசெய்துள்ளமைக்கு அசல் ஆவணங்களையும், வில்லங்க சான்றினையும், இதர ஆவணங்களையும் அளிக்கும்படி வாதி 21.07.2020 ம் தேதியில் ஒரு விசாரணை அழைப்பாணை அனுப்பியுள்ளார். வாதியும் உடனடியாக தாவாச்சொத்து தொடர்பான ஆவணங்கள் மற்றும் வில்லங்கம் ஏதேனும் உள்ளதா? என்று பார்த்தபோதுதான் தாவாச்சொத்தில் பிரதிவாதி, வாதிக்கு தெரியாமல் வில்லங்கம் செய்துள்ளது வாதிக்குதெரிய வந்து கடந்த 13.04.2015 ம் தேதி, வாதிக்கு பிரதிவாதி எழுதி வைத்த செட்டில்மெண்ட் ஆவணத்தினை ரத்து செய்து செட்டில்மெண்ட் ரத்து ஆவணம் எழுதி வைத்துள்ளார். வாதியினைத் தவிர்த்து தன்னிச்சையாக எழுதி வைத்துள்ள மேற்படி செட்டில்மெண்ட் ரத்து ஆவணம் சட்டப்படி செல்லத்தக்கதல்ல,

T Anbu
Digitally signed by T Anbu
Date: 2026.07.21 18:59:59 +0530

புகலானது. வாதியும் இதனால் மன உளைச்சலும், அதிர்ச்சியும் ஏற்பட்டு 12.11.2020 ம் தேதி ஒரு வழக்கறிஞர் அறிவிப்பு பிரதிவாதிகளுக்கும், வருவாய்த்துறையினருக்கும் அனுப்பியுள்ளார். வாதியின் மனைவிக்கும், பிரதிவாதிக்கும் சிறு மனகசப்பு ஏற்பட்டதில் பிரதிவாதி அவரது மகள் தங்கள் குடியிருக்கும் குடும்பலூர் கிராமத்திலேயே தங்கிகொண்டுவிட்டார்.

4. இதனால் பிரதிவாதியின் மகன் கடந்த 21.11.2014 ம் தேதி பாகம் கேட்டு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியுள்ளார் அதற்கு வாதி 01.12.2014 ம் தேதி ஒரு பதில் அறிவிப்பு அனுப்பியுள்ளார்.அதில் தாவாச்சொத்துக்கள் பூர்வீக சொத்துக்கள் அல்ல என்றும், பிரதிவாதி வயதானவரானதால் அவரால் எதுவும் செய்ய இயலாத காரணத்தினால் வாதியே சொத்துக்களை அனுபோகம் செய்து அதிலிருந்து கிடைத்த வருமானத்தை வைத்து பிரதிவாதியின் மகளுக்கு திருமணத்திற்கு சுமார் 20 பவுன் தங்க நகைகள்,சீர்வரிசை சாமான்களும் மற்றும்ரூ.3,00,00 ரொக்கம் பணமும் சீதனமாக கொடுத்து வாதியின் செலவில் திருமணமும் செய்து வைக்கப்பட்டு பின்னிட்டு தீபாவளி, பொங்கல் பண்டிகைகளுக்கு சீர்வரிசை கொடுத்தது தங்கத்தின் இரண்டு பிள்ளைகளும் மொட்டையடித்து, காது குத்தி தலா ½ பவுண் கை மற்றும் துணிமணிகளுடன் ரூ.25,000/- பணம் ரொக்கம் கொடுத்துள்ளார் என்றும், மேற்படி தங்கத்தின் கணவர் சிதம்பரம் நகைகளை அடகு வைத்திருந்ததை வாதி மீட்டுக்கொடுத்துள்ளார். வாதியின் தகப்பனுக்கு இரூர் கிராமத்திலிருந்த சொத்துக்களை விற்று பிரதிவாதியின் பெயரில் போட்டிருந்த ரூ.4,00,000- ஆர்.டி பணம் மற்றும் மற்றும் வாதியின் தாத்தா ந்ல்லு கவுண்டர் ஜுவனாம்சத்திற்காக அவருடைய மகன்கள் பெரியசாமி, மணி ஆகிய இருவரும் சேர்ந்து தலாரூ.25,000/- வீதம் ரூ.50,000/- கொடுத்ததை பிரதிவாதியின் மகள் தங்கம் வாங்கிக்கொண்டு பிரதிவாதிக்கு இனாம் சாசனம் மூலம் கிடைத்த தனிப்பட்ட சொத்தில் பின்னிட்டு வீண் விவகாரங்கள் ஏற்படாமல் இருக்கவேண்டி வாதிக்கு எழுதிவைத்துள்ள செட்டில்மெண்ட் சொத்தில் சமபங்குரிமை கோர வழிவகையில்லை என்று வாதி பதில் அனுப்பியுள்ளார். இதனால் பிரதிவாதியின் மகள் தங்கம் வீண் குரோதம் கொண்டு பிரதிவாதியினை வலுக்கட்டாயமாக குரும்பலூர் கிராமத்தில் உள்ள நபர்களை சாட்சிகளாக வைத்துக்கொண்டு வாதிக்கு தெரியாமல் கடந்த 13.04.2015 ம் தேதி ஒரு செட்டில்மெண்ட் ரத்து ஆவணம் மோசடியாக

T Anbu Digitally signed by T Anbu Date: 2026.07.21 19:00:07 +0530

எழுதிக்கொண்டுள்ளார். மேற்படி ரத்து ஆவணம் செல்லத்தக்கதல்ல. நீக்கரவு செய்யப்படவேண்டும் என இவ்வழக்கு வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

5. **பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையின் சுருக்கம்.**

வாதியின் வழக்கு பொய்யும், புரட்டும், மோசடியுமாகும். வாதிக்கு, பிரதிவாதி எழுதிவைத்த செட்டில்மெண்ட் பத்திரத்தின்படி வாதி, பிரதிவாதியை நல்லமுறையில் கவனித்து வரவும், உணவு, உடை கொடுத்து பராமரித்து வரவும், வாதியின் சகோதரிக்கு முறையாக சொத்து பாகம் கொடுக்கவேண்டும் எனவும் சொல்லித்ததான் மேற்படி செட்டில்மெண்ட் பத்திரம் எழுதப்பட்டது. வாதி மேற்டி விஷயங்களுக்கு பிரதிவாதியிடம் ஒப்புக்கொண்டதால் இந்த செட்டில்மெண்ட் பத்திரம் எழுதி வைக்கப்பட்டது. ஆனால் வாதி, பிரதிவாதியிடமிருந்து செட்டில்மெண்ட் பத்திரம் எழுதி கொண்டபிறகு வாதி, பிரதிவாதிக்கு உணவு, உடை வழங்காமலும் நல்லமுறையில் பராமரிக்காமலும் வீட்டைவிட்டு அடித்து துரத்திவிட்டுவிட்டார். பிரதிவாதி உயிருக்கு பயந்துகொண்டும், பிழைக்க வழியின்றியும் தற்போது தன் மகள் வீட்டில் வசித்து வருகின்றார். பிரதிவாதியிடமிருந்து சொத்தை ஏமாற்றி பெற்றுக்கொள்ளலாம் என்ற கெட்ட எண்ணத்தில் பிழைக்க வேறு வழியின்றி தற்போது தன் மகள் வீட்டில் வசித்து வருகின்றார். பிரதிவாதியிடமிருந்து சொத்தை ஏமாற்றி பெற்றுக்கொள்ளலாம் என்ற கெட்ட எண்ணத்தில் வாதி இந்த செட்டில்மெண்ட் பத்திரத்திதனை பெற்றுக்கொண்டு அதிக திமிராகவும் பிரதிவாதியை அடித்து துரத்திவிட்டார். வேறு வழி தெரியாத பிரதிவாதி தன் பெற்றோர்களுடன் கஷ்டப்பட்டு சம்பாதித்த தாவா சொத்தை ஏமாற்றவிடாமல் வாதியிடமிருந்து காப்பாற்றுவதற்காகவே வாதி பெயரில் பிரதிவாதி எழுதிவைத்த செட்டில்மெண்ட் பத்திரத்தினை 13.04.2015ம் தேதி ரத்து செய்துவிட்டார்.

6. வழக்குரையில் கூறியவாறு வாதியின் மனைவிக்கும், பிரதிவாதிக்கும் மனக்கசப்பு ஏற்படவில்லை. வாதியும், வாதியோடு மனைவியும் நீதான் சொத்தை எழுதிக்கொடுத்துவிட்டாயே உனக்கு இங்கு எனன வேலை உன் மகள் வீட்டிற்கு ஓடிவிடு. இல்லாவிட்டால் கொன்றுவிடுவோம் என்று திட்டி, மிரட்டி அடித்து வீட்டைவிட்டு துரத்திவிட்டார்கள். வாதியின் சகோதரியும், பிரதிவாதியின் மகளுமான

T Anbu

Digitally signed by T Anbu
Date: 2026.07.21 19:00:15 +0530

தங்கம் என்பவர் தனது தாயார் பெயரில் சொத்து இருந்தபோதிலும் தற்போதும் எந்த பாகப்பிரிவினையும் கேட்கவில்லை. பிரதிவாதியான தனது தாயாரை தனது சகோதரனும், சகோதரனின் மனைவியும் அடித்து வீட்டைவிட்டு துரத்திய பின்புதான் தாவாச்சொத்தில் தனக்குரிய பாகத்தை வாதி கொடுக்கவேண்டும் என ஒரு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினார். பிரதிவாதிக்கு தாவா சொத்துக்கள் அவருடைய தகப்பனார் எழுதிய சொத்தாகும். தாவா சொத்தானது பூர்வீக சொத்தாகும். இது கூட்டுக்குடும்ப செத்தாகும். தாவாச்சொத்து பிரதிவாதியின் பெயரில் இருந்தபோதிலும், தற்போது பிரதிவாதியின் கணவர்தான் அனுபவம் செய்து வருகிறார். வாதி சிறிதளவும் தாவாச்சொததில் அனுபவம் இல்லை. வழக்கிற்கு வழக்குமூலம் இல்லை. பிரதிவாதியை நன்கு பராமரிக்காமலும், பிரதிவாதிக்கு உணவு, உடை கொடுக்காததாலும், பிரதிவாதியின் மகளுக்கு இந்த வாதி பாகம் கொடுககாததாலும் பிரதிவாதி 13.04.2015 ம் தேதி ரத்து செய்த செட்டில்மெண்ட் ஆவணம் சட்டபப்டி செல்லுபடியானதாகும் என்று உத்தரவு வழங்கவேண்டியது. அந்த வகையில் வாதியின் வழக்கு பிரதிவாதியின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யப்படவேண்டும் என எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

7. வாதியின் வழக்குரை, பிரதிவாதியின் எதிர்வழக்குரை ஆகியவற்றினை ஆய்ந்து கீழ்க்கண்ட எழுவினாக்கள் தீர்வுக்காக வனையப்பட்டன.

1. பிரதிவாதியால் கடந்த 28.02.2011 ம் தேதியில் வாதிக்கு செட்டில்மெண்ட் ஆவணம் எழுதிவைத்த பின்பு செட்டில்மெண்ட் ஆவணத்தினை தன்னிச்சையாக பிரதிவாதி ரத்து செய்ய முடியுமா?
2. 13.04.2015 ம் தேதியில் பிரதிவாதியால் ரத்து செய்யப்பட்ட செட்டில்மெண்ட் ஆவணம் சட்டப்படி செல்லத்தக்கதல்ல என விளம்புகை பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கதா?
3. வாதிக்கு கிடைக்கக்கூடிய பிற பரிகாரங்கள் என்ன?

8. வாதியின் தரப்பில் வாதி ராஜா வா.சா.1 ஆகவும், செந்தில்குமார் வா.சா.2 ஆகவும் விசாரிக்கப்பட்டு, வா.சா.ஆ.1 முதல் 12 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. பிரதிவாதி தரப்பில் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

T Anbu

Digitally signed by T Anbu
Date: 2026.07.21 19:00:23 +0530

9. வாதி தரப்பில் ஆஜரான வழக்கறிஞர், பிரதிவாதியின் தகப்பனார் நல்லுகவுண்டர் தாவாச்சொத்துக்களை பிரதிவாதிக்கு கடந்த 17.05.1993 ம் தேதியில் ஒரு இனாம்சாசனம் எழுதி வைத்ததன் படிக்கு பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டு, அவரது அனுபோகத்திலும், சுவாதீனத்திலும் இருந்து வந்த சொத்தினை பிரதிவாதி, வாதிக்கு 28.02.2011 ம் தேதியில் ஒரு செட்டில்மெண்ட் மூலம் சுவாதீனமும் ஒப்படைத்துள்ளார் எனவும், வாதி செட்டில்மெண்ட் நாள் முதல் தாவாச்சொத்துக்களை யாவருமறிய நிராட்சேபணையாக அடைந்து ஆண்டு அனுபோகமும் செய்து கொண்டு வருகிறார் எனவும், பிரதிவாதி, வாதிக்கு எழுதி வைத்த ஆவணம் செட்டில்மெண்ட் பத்திரம் என்பதால் அதில் கண்டுள்ள உயில் வாசகங்கள் மேற்படி செட்டில்மெண்ட் பத்திரத்திற்கு சட்டப்படி பொருந்தாது. வாதிக்கு, பிரதிவாதி செட்டில்மெண்ட் தேதியில் தாவாச்சொத்துக்களின் சுவாதீனத்தினை ஒப்படைத்துவிட்டபடியால் தாவாச்சொத்துக்ளில் பிரதிவாதிக்கு அதில் உரிமை கோருவதற்கு சட்டப்படி எவ்வித வழிவகையும் இல்லை என்று சென்னை உயர்நீதிமன்றமும் பல்வேறு தீர்ப்புகளை வழங்கியுள்ளது எனவும், தாவாச்சொத்துக்கள் செட்டில்மெண்ட் ஏற்பட்ட நாள் முதல் வாதியின் அனுபோகத்திலிருந்து வருவதை அனுசரித்து வருவாய்த்துறையினரும் வாதியின் பெயருக்கு பட்டா வழங்கியுள்ளனர் எனவும் வாதிட்டார்.

10. மேலும், கடந்த 21.07.2020 ம் தேதியில் வாதிக்கு தனி மாவட்ட வருவாய் அலுவலர் அவர்கள் நான்குவழி சாலை அமைக்க தாவாச்சொத்தின் ஒரு பகுதியினை அரசு நில எடுப்பு செய்துள்ளமைக்கு அசல் ஆவணங்களையும், வில்லங்க சான்றினையும், இதர ஆவணங்களையும் அளிக்கும்படி வாதி 21.07.2020 ம் தேதியில் ஒரு விசாரணை அழைப்பாணை அனுப்பியுள்ளார். வாதியும் உடனடியாக தாவாச்சொத்து தொடர்பான ஆவணங்கள் மற்றும் வில்லங்கம் ஏதேனும் உள்ளதா? என்று பார்த்தபோதுதான் தாவாச்சொத்தில் பிரதிவாதி, வாதிக்கு தெரியாமல் வில்லங்கம் செய்துள்ளது வாதிக்குதெரிய வந்து கடந்த 13.04.2015 ம் தேதி, வாதிக்கு பிரதிவாதி எழுதி வைத்த செட்டில்மெண்ட் ஆவணத்தினை ரத்து செய்து செட்டில்மெண்ட் ரத்து ஆவணம் எழுதி வைத்துள்ளார் எனவும், வாதியினைத் தவிர்த்து தன்னிச்சையாக எழுதி வைத்துள்ள மேற்படி செட்டில்மெண்ட் ரத்து ஆவணம் சட்டப்படி

T Anbu
Digitally signed by T Anbu
Date: 2026.07.21 19:00:31 +0530

செல்லத்தக்கதல்ல, புகலானது எனவும், பிரதிவாதியின் மகள் தங்கம் வீண் குரோதம் கொண்டு பிரதிவாதியினை வலுக்கட்டாயமாக குரும்பலூர் கிராமத்தில் உள்ள நபர்களை சாட்சிகளாக வைத்துக்கொண்டு வாதிக்கு தெரியாமல் கடந்த 13.04.2015 ம் தேதி ஒரு செட்டில்மெண்ட் ரத்து ஆவணம் மோசடியாக எழுதிக்கொண்டுள்ளார் எனவும், மேற்படி ரத்து ஆவணம் செல்லத்தக்கதல்ல, நீக்கரவு செய்யப்படவேண்டும் என கீழ்க்கண்ட முன் தீர்ப்புகளை மேற்கோள்காட்டி வாதிட்டார்.

1. மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் S.A.No.262/2013- K.Valliammal and another Vs. K.Krishnamurthy , dated 02.06.2014
2. மாண்புமிகு உச்சநீதிமன்றம் 2024-SD(online)( MAD) 19528- Boopathy (a) Venkatachalapathy Vs. The Collector, dated 06.08.2024
3. மாண்புமிகு உச்சநீதிமன்றம் 2023-SC( Online) ( Mad) 92318 Valliammal ( died) vs. Ananthalakshmi- S.A.No. 794 of 2017. dated 17.12.2023
4. மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் A.Mohanraj Vs.The District Registrar, Namakkal and others- Writ petition No.24807 of 2012. dated 05.04.2022
5. மாண்புமிகு உச்சநீதிமன்றம் Daliben Valjibhai and others Vs. Prajapati Kodarbhai Kachrabhai and another- Arising out of SLP (Civil) No.23625 of 2024. dated 11.12.2024.
6. மாண்புமிகு உச்சநீதிமன்றம் 2025 Livelaw (SC) 900 Shanti Devi ( since deceased ) through Lrs.Goan vs.Jagan devi and others-Civil appeal No.11795 of 2025 @ SLP(c) No.24821 /2018
7. மாண்புமிகு உச்சநீதிமன்றம் 2025 INSC 485, Nikhila Divyang Mehta and another Vs.Hitesh.P Sanghvi and others , dated 15.04.205
8. மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் S.A.No.2209 of 2003 and CMP No.20710 of 2003 Palanisamy Vs. Subramaniam and others. dated 26.03.2018
9. மாண்புமிகு உச்சநீதிமன்றம் Civil Appeal No.4312 of 2025 N.P.Saseendran vs.N.P.Ponnamma and others, dated 24.03.2025
10. மாண்புமிகு உச்சநீதிமன்றம் 1977- 110 Ramaswami Naidu Vs. Gopalakrishna Naidu, dated 02.04.1977

T Anbu

Digitally signed by T Anbu
Date: 2026.07.21 19:00:39 +0530

11. **<u>எழுவினாக்கள் 1,2</u>**

**பிரதிவாதியால் கடந்த 28.02.2011ம் தேதியில் வாதிக்கு செட்டில்மெண்ட் ஆவணம் எழுதிவைத்த பின்பு செட்டில்மெண்ட் ஆவணத்தினை தன்னிச்சையாக பிரதிவாதி ரத்து செய்ய முடியுமா? 13.04.2015ம் தேதியில் பிரதிவாதியால் ரத்து செய்யப்பட்ட செட்டில்மெண்ட் ஆவணம் சட்டப்படி செல்லத்தக்கதல்ல என விளம்புகை பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கதா? என இந்த இரு எழுவினாக்களுக்கும் தீர்வு காணும் பொருட்டு, வழக்கு ஆவணங்களை பரிசீலிக்கையில்:–**

வாதி ராஜா வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, 19.11.2024ம் தேதியன்று முதல் நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்து வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.12 சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டு, பிரதிவாதியின் வழக்கறிஞர் ஆஜரின்மையால் இயற்கை நியதியின் அடிப்படையில் குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்பட்டது. பின்பு 10.12.2024ம் தேதியன்று பிரதிவாதி தரப்பில் வா.சா.1 ராஜாவை பகுதியாக குறுக்கு விசாரணை செய்யப்பட்டு, மேற்கொண்டு குறுக்கு விசாரணை தொடச்சி பிரதிவாதியின் வழக்கறிஞர் கோரிக்கையினை ஏற்று ஒத்திவைக்கப்பட்டது.

12. இந்நிலையில், 14.12.2024, 06.01.2025, 03.02.2025, ஆகிய தேதிகளில் வா.சா.1 குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வழக்கு ஒத்திவைக்கப்பட்ட நிலையில் 25.02.2025 அன்று இருதரப்பு கோரிக்கையும் ஏற்று சமரசத்திற்காக லோக் அதாலத்திற்கு வழக்கு அனுப்பப்பட்ட நிலையில் 08.03.2025 அன்று வாதி ஆஜரான நிலையில் பிரதிவாதியின் தரப்பில் ஆஜரில்லை என்பதால், வழக்கு மீண்டும் நீதிமன்றத்திற்கு வா.சா.1 குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக 24.03.2025 அன்று அனுப்பப்பட்டது. மேற்கண்ட 5 கேட்பு நாட்களிலும் வா.சா.1 ஆஜரில் இருந்துள்ளார். மேலும், 11.06.2025 அன்று வா.சா.1 குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வாய்தா போடப்பட்ட நிலையில், பிரதிவாதி தரப்பில் ஆஜரில்லை. எனவே, 17.06.2025, 2.06.2025, 01.07.2025, 23.07.2025 இறுதியாக 29.07.2025 ஆகிய அனைத்து கேட்பு நாட்களிலும் வா.சா.1 ஆஜரில் இருந்துள்ளார். மாறாக பிரதிவாதி தரப்பில் பிரதிநிதித்துவம் இல்லை. 7 மாத காலமாக வா.சா.1 சாட்சியை பிரதிவாதி தரப்பில் தொடர் குறுக்கு விசாரணை செய்யாததால் 29.07.2025 அன்று

T Anbu Digitally signed by T Anbu Date: 2026.07.21 19:00:47 +0530

தோன்றாத்தரப்பினராக்கப்பட்டார். இந்த அனைத்து கேட்பு நாட்களிலும் வா.சா.1 சாட்சி ஆஜரில் இருந்தார் என்பது கவனிக்கவேண்டிய சங்கதியாகும்.

13. இந்நிலையில், வாதி தரப்பில் மேலும் சாட்சிகளை ஆஜர்படுத்த வாய்ப்பளிக்கப்பட்டு 06.10.2025 அன்று வா.சா.2 செந்தில்குமார் விசாரிக்கப்பட்டு, 27.10.2025 அன்று வாதியின் தரப்பில் மேற்கொண்டு சாட்சிகள் இல்லை என மேற்குறிப்பு செய்யப்பட்டு, வாதியின் தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது.

14. பிரதிவாதியின் தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்த பிறகு, வா.சா.1 ஐ பகுதி குறுக்கு விசாரணை செய்துவிட்டு, தொடர் குறுக்கு விரணை செய்யாத தவறுகையால் 29.07.2025 ம் தேதியன்று தோன்றாத்தரப்பினராக்கப்பட்டார்.

15. இவ்வழக்கில் வாதுரை, எதிர்வழக்குரை, வழக்காவணங்களின் அடிப்படையில் மேலே கண்டவாறு மூன்று எழுவினாக்கள் வனையப்பட்ட நிலையில் வா.சா.1 சாட்சியினை பிரதிவாதி தரப்பில் தொடர் குறுக்கு விசாரணை செய்யாததால் தோன்றாத்தரப்பினராக்கப்பட்டார். இவ்வழக்கானது, வழக்குரை, எதிர்வழக்குரை, வா.சா.1,2 சாட்சியங்கள் வா.சா.ஆ.1 முதல் 12 வரையிலான சான்றாவணங்களின் அடிப்படையில் வழக்கின் தன்மைக்கேற்ப முன்னிலைப்படுத்தப்பட்ட சான்றாவணங்களின் அடிப்படையில் தீர்வு காணவேண்டுமா? அல்லது மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளை CRP MD No. 1113 of 2026 reported in Family Manager A.Subramanian vs. P.Kandasamy (died) என்ற வழக்கில் சுட்டிக்காட்டியபடி தோன்றாத்தரப்பினராக்கப்பட்ட பிரதிவாதியின் தரப்பில் சாட்சி கூண்டில் ஏறி சாட்சியை முன்னிலைப்படுத்தாததாலும், சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படாத நிலையில், வா.சா.1 ஐ பகுதி குறுக்கு விசாரணை செய்வதால் மட்டுமே வழக்கை மேற்சொன்னவாறு வழக்கின் பொருண்மையின் தகுநிலைக்கு ஏற்றவாறு ( Merit of the Case) தீர்வு காண்பதா? அல்லது மேலே சுட்டிக்காட்டிய மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம், மதுரை கிளையில் வழங்கப்பட்ட முன் தீர்ப்பின் அடிப்படையில், இவ்வழக்கை பிரதிவாதி தோன்றாத்தரப்பினராக்கப்பட்டதன் அடிப்படையில் தீர்வு காண்பதா? என்பதே அடிப்படை அம்சமாக உள்ளது.

T Anbu

Digitally signed by T Anbu
Date: 2026.07.21 19:00:56 +0530

16. கற்றறிந்த வாதியின் வழக்கறிஞர் பிரதிவாதியின் தரப்பில் வாதியை பகுதி குறுக்கு விசாரணை செய்யாததால், வழக்கின் பொருண்மையின் தகுதிக்கு ஏற்றவாறு ( Merit of the Case) அடிப்படையில் தீர்வு காணவேண்டும் என வாதிட்டார். ஆனால், மேலே சுட்டிக்காட்டப்பட்ட மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளை CRP MD No. 1113 of 2026 reported in Family Manager A.Subramanian vs. P.Kandasamy (died) என்ற வழக்கில் சுட்டிக்காட்டியபடி பிரதிவாதியின் தரப்பில் சாட்சி கூண்டில் ஏறி சாட்சியை முன்னிலைப்படுத்தாததாலும், சான்றாவணங்கள் முன்னிலைப்படுத்தப்படாததாலும், வழக்கின் பொருண்மை தகுநிலைக்கு ஏற்றவாறு தீர்வு காண முடியாது என கீழ்க்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

This revision raises interpretation of Order 17. Rule 2 and Rule 3(a) of the Code of Civil Procedure. In terms of Order 17 Rule 2 of the Code, a Court is given the power, either to render a judgment on the merits of the case or to proceed under any one of the modes contemplated under order 9 of the code. On account of the conflicting views that were taken by Courts, Order 17 was amended and an explanation was inserted in the said provision vide the code of Civil Procedure ( Amendment) Act 1976 w.e.f.01.12.197. As per the explanation a court is entitled to go into the merits of the case and pass a Decree, if the Suit had suffered and adjournment at the instance of a party, who does not s appear before the Court and the said party had let in evidence or a substantial portion or his evidence in the suit.

I need not strain on the legal position as to the interpretation of Order 17. Rule2 of the code, as the same has been settled in B.Janakiramaiah Chetty V.A.K.Parthasarathi 2003 (2) CTC 242 (SC) 2003 (5) SCC 641. The Supreme Court directed that a Court cannot proceed on to the merits of the case, if no evidence had been let in by the Defendant in support of his case. Mere cross-examination by the Defendant of the Witnesses of the Plaintiff cannot be treated as evidence on his side. For the purpose of attracting the explanation under Order 17 Rul2 of the Code, a party should have entered the Witness Box and completed his evidence in full or at least a substantial portion thereof. As none of the Defendant had entered the Witness Box, it cannot be treated that the Judgment, dated 21.08.2023 is one on merits.

T Anbu

Digitally signed by T Anbu
Date: 2026.07.21 19:01:05 +0530

எனவே, இவ்வழக்கில் பிரதிவாதி தரப்பு சாட்சியங்கள், சான்றாவணங்கள் முன்னிலைப்படுத்தாததாலும் 29.07.2025 ம் தேதியன்று தோன்றாத்தரப்பினராக்கப்பட்டதாலும், பிரதிவாதி தோன்றாத்தரப்பினர் என முடிவு செய்து, வாதி தரப்பில் முன்னிலைப்படுத்தப்பட்ட சாட்சியம், சான்றாவணங்களின் அடிப்படையில் தீர்வு காணப்படுகிறது.

17. வா.சா.1 ராஜாவிற்கு பிரதிவாதி வீரம்மாள் தாயார் ஆவார். தாவாச்சொத்தானது 17.05.1993 ம் தேதி வாதியின் தாய் வழி பாட்டனார் நல்லு கவுண்டர், வாதியின் தாயார் பிரதிவாதிக்கு இனாம் சாசனம் எழுதிவைத்ததன் அடிப்படையில் பாத்தியப்பட்டு, அனுபவத்தில் இருந்த நிலையில், இந்த பிரதிவாதி வாதிக்கு 28.02.2011 அன்று வா.சா.ஆ.2 ஆவணம் மூலம் தாவாச்சொத்தைப் பொருத்து தான செட்டில்மெண்ட் எழுதி வைத்ததாகவும், அன்று முதல் சுவாதீனம் பெற்று வருவாய்த்துறையில் பட்டாவை மாற்றி வரி ரசீதுகள் செலுத்தி அனுபவம் செய்து வருவதாகவும், இந்நிலையில் வாதிக்கு தெரியாமல் கடந்த 13.04.2015 அன்று பிரதிவாதி தன்னிச்சையாக வா.சா.ஆ.1 தான செட்டில்மெண்ட் ஆவணத்தினை ரத்து செய்துவிட்டதாகவும், இது தனக்கு 21.07.20220 அன்று தனி மாவட்ட வருவாய் ஆய்வாளர், தாவாச்சொத்து வழியாக நான்கு வழி சாலை அமைக்க நில எடுப்பு செய்யும்போது, விசாரணை அழைப்பாணையில் அனுப்பினார். உடன் தாவாச்சொத்து சம்மந்தமாக வில்லங்கம் எடுத்து பார்க்கும்போது தனக்கு தெரிய வந்ததாகவும், அது சட்டத்திற்கு புறம்பானது. மேலும், பிரதிவாதியின் மகள் தங்கத்திற்கு போதிய சீர் வரிசை, பணம் கொடுக்கப்பட்டதாகவும், பிரதிவாதி தான செட்டில்மெண்ட் ஆவணத்தினை ரத்து செய்த ஆவணம் வா.சா.ஆ.8 சட்டப்படி செல்லத்தக்கதல்ல எனவும், எனவே, வா.சா.ஆ.8 தான செட்டில்மெண்ட் ரத்து ஆவணம் வாதியை கட்டுப்படுத்தாது எனவும் விளம்புகை செய்யவேண்டும் என சாட்சியமளித்துள்ளார்.

18. வா.சா.ஆ.2 பிரதிவாதியால், வாதிக்கு எழுதிக்கொடுக்கப்பட்ட தாவாச்சொத்து சம்மந்தப்பட்ட தான செட்டில்மெண்ட் பத்திரம் பக்கம் 5 ல், கீழ்க்கண்டவாறு எழுதப்பட்டுள்ளது.

" என்னுடைய ஒரே மகன் என் ஆயுளுக்குப்பின் நீ நிராதரவாக இருக்கக்கூடாது என்பதாலும், உனக்கு திருமணம் செய்ய ஏற்பாடு நடப்பதாலும், உன்னுடைய பிற்கால நலன் கருதி உகக்கு ஒரு அதரவு

T Anbu

Digitally signed by T Anbu
Date: 2026.07.21 19:01:12 +0530

செய்து வைக்க நான் விரும்பியும், உன் பேரில் எனக்குள்ள அன்பினாலும், பிரியத்தினாலும், மேற்படி இனாம்சாசனப்படிக்கு எனக்கு சொந்தமான புஞ்சை நிலத்தை என் ஆயுள் வரை நீயும், நானும் ஜாயிண்டாக அனுபவத்து வரவேண்டியது. என் ஆயூள்வரை அடியிற்கண்ட சொத்தில் நான் எவ்வித நான் எவ்வித வில்லங்கமும், பராதீனமும் செய்ய உரிமையில்லை. அப்படி ஏதேனும் வில்லங்கம் பாராதீனம் செய்யவேண்டி வந்தால் நீயும், நானும் சேர்ந்து செய்யவேண்டியது.

என் ஆயுளுக்கு பின் அடியிற்கண்ட சொத்தினை நீ சர்வ சுதந்திரமாக அடைந்துகொண்டுதானாதி வினிமய கிரையவிற்கிரையங்களுக்கும் யோக்கியமாய் சகல சுதந்திரத்துடன் ஆண்டு அனுபவித்துக்கொள்ளவேண்டியது. அடியிற்கண்ட சொத்தை இன்றே உன்னுடைய சுவாதீனத்தில் விட்டுள்ளபடியால் இனிமேற்படி சொத்தினை நிலப்பட்டாவை இனி நீ உன் பெயருக்கு மாற்றிக்கொண்டு தீர்வை முகலானதும் செலுத்திக்கொள்ளவேண்டியது. இந்த செட்டில்மெண்ட் பத்திரத்தை நான் மாற்றுகிறதோ, ரத்து செய்கிறதோ இல்லை. அப்படி செய்தாலும், அது செல்லத்தக்கதல்ல. இந்தப்படி நான் சம்மதித்து இந்த செட்டில்மெண்ட் பத்திரம் எழுதி வைத்துள்ளேன்" என குறிப்பிடப்பட்டுள்ளது.

19. இதில், இருவரும் ஜாயிண்டாக அனுபவித்துக்கொள்ளவேண்டியது, நீயும், நானும் சேர்ந்து வில்லங்கம், பாராதீனம் செய்துகொள்ளவேண்டியது, மேலும் தொடர்ச்சியாக ஆயுளுக்கு பின் அடியில் கண்ட சொத்தினை அடைந்து அனுபவித்துக்கொள்ளவேண்டியது. அதன் அடிப்படையில் அடியில் கண்ட சொத்தை இன்றே சுவாதீனத்தில் விட்டுவிட்டபடியால் பட்டாவை மாற்றி தீர்வு செலுத்திக்கொள்ளவேண்டியது என உயில் வாசகங்கள் மற்றும் தான செட்டில்மெண்ட் வாசகங்கள் என இரண்டும் கலந்து எழுதப்பட்டுள்ளது.

20. கற்றறிந்த வாதியின் வழக்கறிஞர் மேலே சுட்டிக்காட்டப்பட்ட முன் தீர்ப்பின் அடிப்படையில் தாவாச்சொத்து இன்றே சுவாதீனத்தில் விட்டுவிட்டப்படியாலும் வா.சா.ஆ.2 முதல் 6 ஆவணங்களின்படி தாவாச்சொத்தில் வாதி இருந்து தான செட்டில்மெண்ட் பத்திரம் ஏற்றுக்கொள்ளப்பட்டு, நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது என்பதாலும்,

T Anbu
Digitally signed by T Anbu
Date: 2026.07.21 19:01:21

இது தான செட்டில்மெண்ட் ஆவணம் தான் என்றும், இதனை பரிசீலனை செய்கையில், வா.சா.ஆ.2 ஆவணத்திலேயே இதனை நான் மாற்றுகிறதோ, ரத்து செய்கிறதோ இல்லை என்றும், அப்படி செய்தாலும் அது செல்லத்தக்கதல்ல என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த வா.சா.ஆ.2 தான செட்டில்மெண்ட் ஆவணத்தின் அடிப்படையில் வாதி தாவாச்சொத்தை அடைந்து தாவாச்சொத்திற்கான பட்டாவினை தன் பெயரில் மாற்றிக்கொண்டார். அந்த ஆவணம் தான் வா.சா.ஆ.3. மேலும் தாவாச்சொத்திற்கான நிலவரி வா.சா.ஆ.4, தாவாச்சொத்திற்கான வீட்டுவரி வா.சா.ஆ.5, தாவாச்சொத்திற்கான கிராம அடங்கள் கணக்கு வா.சா.ஆ.6 ஆகியவற்றின் அடிப்படையில் வா.சா.ஆ.2 ஆவணம் வாதியால் ஏற்றுக்கொள்ளப்பட்டு, சொத்து மாற்றுச்சட்டம் பிரிவு 123 ன் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்டது என்றும், எனவே, நடைமுறைப்படுத்தப்பட்ட வா.சா.ஆ.2 ஆவணத்தினை தன்னிச்சையாக வா.சா.ஆ.8 ரத்து ஆவணம் மூலம் ரத்து செய்யமுடியாது, இந்த ஆவணத்தில் சொல்லப்பட்ட காரணங்கள் ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல. வா.சா.ஆ.2 தான செட்டில்மெண்ட் ஆவணத்திலேயே நான் மாற்றுகிறதோ, ரத்து செய்கிறதோ இல்லை என ஒப்புக்கொண்டுள்ளதால், வா.சா.ஆ.8 ரத்து ஆவணத்தினை பிரதிவாதி எழுத உரிமையில்லை என்றும், வா.சா.ஆ.8 ரத்து பத்திரத்தில் உள்ள சாட்சிகள் தாவா கிராம சாட்சிகள் இல்லை எனவும், வா.சா.ஆ.2 தான செட்டில்மெண்ட் ஆவணத்தினை நிரூபிக்கின்ற வகையில், வா.சா.2 செந்தில்குமார் தான செட்டில்மெண்ட் ஆவணத்தின் இரண்டாவது சான்றொப்ப சாட்சி வாதி தரப்பில் விசாரிக்கப்பட்டுள்ளார். இந்த வா.சா.2 செந்தில்குமார், வா.சா.ஆ.2 தானசெட்டில்மெண்ட் ஆவணத்தின்படி வாதிக்கு எழுதி வைத்து பாத்தியப்படுத்திவிட்டார். அதில் தான் சாட்சி கையொப்பமிட்டேன் என்றும், இந்த ஆவணத்தின்படி தாவாச்சொத்தை வாதி அடைந்து அனுபவம் செய்து வருகிறார் என சாட்சியமளித்துள்ளார்.

21. பிரதிவாதியின் தரப்பில், வா.சா.1 ஐ பகுதி குறுக்கு விசாரணை செய்யப்பட்ட போதிலும், வா.சா.ஆ.2 ஆவணத்தினை அனுசரித்தே வா.சா.1 சாட்சியளித்துள்ளார். மேற்கண்ட சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையின் முன் தீர்ப்பின்படி பிரதிவாதி தோன்றாத்தரப்பினராக்கப்பட்டதால், இவ்வழக்கை பிரதிவாதி தோன்றாத்தரப்பினர் என்ற முறையில் வாதியின் தரப்பில்

T Anbu
Digitally signed by T Anbu
Date: 2026.07.21 19:01:29 +0530

முன்னிலைப்படுத்தப்பட்ட வா.சா.ஆ.2 முதல் வா.சா.ஆ.6 ஆவணங்களின் அடிப்படையில் தாவாச்சொத்துப் பொருத்து பிரதிவாதி, வாதிக்கு எழுதிவைத்த ஆவணம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதாலும், அது செல்லத்தக்கது என்றும், பிறகு 2015ம் ஆண்டு வா.சா.ஆ 2 ஆவணத்தினை ரத்து செய்து எழுதி வைக்கப்பட்ட வா.சா.ஆ.8 செட்டில்மெண்ட் ரத்து பத்திரத்தினை எழுதிவைக்க பிரதிவாதிக்கு எவ்வாறு அதிகாரம் உள்ளது, என்ன காரணத்திற்காக அவ்வாறு ரத்து செய்தார், ரத்து செய்ததற்கு சொல்லப்பட்ட காரணங்கள் ஏற்றுக்கொள்ளக்கூடியதா? அல்லது வா.சா.ஆ.2 தான செட்டில்மெண்ட் ஆவணத்தில் சொல்லப்பட்டுள்ள உயில் வாசகங்கள் போன்று ஆயுள் உள்ள வரை ஜாயிண்டாக அனுபவித்துக்கொள்ளவேண்டியது போன்ற வாசகங்களால் வா.சா.ஆ.2 ஆவணம் செட்டில்மெண்ட் ஆவணம் அல்ல, உயில் ஆவணம் போன்ற அடிப்படை சங்கதிகள் மற்றும் சட்டம் கலந்த பொருண்மைகளை பொருத்து பிரதிவாதி தரப்பில் சாட்சியங்கள் முன்னிலைப்படுத்தாமல் தோன்றாத்தரப்பினராக உள்ளதால், மேற்சொன்ன மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம், மதுரை கிளை தீர்ப்பின்படி, வாதியால் முன்னிலைப்படுத்தப்பட்ட சாட்சியங்கள், மற்றும் சான்றாவணங்களின் அடிப்படையில் வா.சா.ஆ.8 ரத்து ஆவணத்தினை ரத்து செய்ய பிரதிவாதிக்கு உரிமை கிடையாது என முடிவு செய்து, பிரதிவாதியால் கடந்த 28.02.2011ம் தேதியில் வாதிக்கு செட்டில்மெண்ட் ஆவணம் எழுதிவைத்த பின்பு செட்டில்மெண்ட் ஆவணத்தினை தன்னிச்சையாக பிரதிவாதி ரத்து செய்ய முடியாது எனவும், இந்த வா.சா.ஆ.8 ஆவணம் வாதியை கட்டுப்படுத்தாது, சட்டப்படி செல்லத்தக்கதல்ல என விளம்புகை பரிகாரம் வழங்கி வாதிக்கு ஆதரவாக இவ்வெழுவினாக்களுக்கு தீர்வு காணப்படுகிறது.

22. **<u>எழுவினா 3</u>**

வாதிக்கு கிடைக்கக்கூடிய பிற பரிகாரங்கள் என்ன? என்பதைப்பற்றி பரிசீலிக்கையில்:-

எழுவினாக்கள் 1,2 ஆகியவற்றிற்கு வாதிக்கு ஆதரவாக தீர்வு கண்டுள்ளதால் வேறு எந்த பரிகாரங்களும் வாதிக்கு கிடைக்கத்தக்கதல்ல என இந்த எழுவினாவிற்கு தீர்வு காணப்படுகிறது.

T Anbu

Digitally signed by T Anbu
Date: 2026.07.21 19:01:37 +0530

இறுதியாக வாதியின் வழக்கை அனுமதித்தும், தாவாச்சொத்துக்களைப் பொருத்து பிரதிவாதி தன்னிச்சையாக 13.04.2015ம் தேதியில் ஏற்படுத்தியுள்ள செட்டில்மெண்ட் ரத்து ஆவணமானது ( 2658/2015) சட்டப்படி செல்லத்தக்கதல்ல மற்றும் வாதியை எவ்வகையிலும் கட்டுப்படுத்தக்கூடியதல்ல என விளம்புகை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கின்றது. வழக்கின் சூழ்நிலை மற்றும் தரப்பினர்களின் உறவு முறையினை கருத்திற்கொண்டு செலவுத்தொகை இல்லை.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்தாளருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் படித்துப்பார்த்து பிழைநீக்கம் செய்யப்பட்டு 2026ம் ஆண்டு ஜுலை திங்கள் 21ம் நாளான இன்று இந்நீதிமன்றத்தின் முன் அவையறிய பகரப்பட்டது.

T Anbu

Digitally signed by T Anbu
Date: 2026.07.21 19:01:45 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
துறையூர்.

**வாதி தரப்பு சாட்சிகள்**

வா.சா.1 ராஜா

வா.சா.2 செந்தில்குமார்

**வாதி தரப்பு சான்றாவணங்கள்**

| ஆவண எண். | தேதி | ஆவணம் | ஆவணத்தின் தன்மை |
|---|---|---|---|
| வா.சா.ஆ.1 | – | வாதியின் ஆதார் அடையாள அட்டை ( அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது) | நகல் |
| வா.சா.ஆ.2 | 28.02.2011 | வாதிக்கு, பிரதிவாதி எழுதிவைத்த செட்டில்மெண்ட் பத்திரம் | சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.3 | – | வாதியின் பெயரில் ஏற்பட்டுள்ள பட்டா | கணினி நகல் |

T Anbu

Digitally signed by T Anbu
Date: 2026.07.21 19:02:01 +0530

| | | | |
|---|---|---|---|
| வா.சா.ஆ.4 | 12.03.2020 | வாதியின் பெயரில் ஏற்பட்டுள்ள வாய்தா ரசீது | அசல் |
| வா.சா.ஆ.5 | 26.02.2021 | வாதியின் பெயரில் ஏற்பட்டுள்ள வீட்டுவரி ரசீது | அசல் |
| வா.சா.ஆ.6 | – | வாதியின் பெயரில் ஏற்பட்டுள்ள அடங்கல் | உண்மை நகல் |
| வா.சா.ஆ.7 | 21.07.2020 | வாதிக்கு தனிமாட்ட வருவாய் அலுவலகத்திலிருந்து அனுப்பப்பட்ட அழைப்பாணை | நகல் |
| வா.சா.ஆ.8 | 13.04.2015 | பிரதிவாதி எழுதிவைத்த செட்டில்மெண்ட் ரத்துப்பத்திரம் | சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.9 | 12.11.2020 | வாதி, பிரதிவாதிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு | அலுவலக நகல் |
| வா.சா.ஆ.10 | – | தாவாச்சொத்திற்கான வில்லங்க சான்றிதழ் | கணினி நகல் |
| வா.சா.ஆ.11 | 21.11.2014 | பிரதிவாதியின் மகள், வாதிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு | அலுவலக நகல் |
| வா.சா.ஆ.12 | 02.12.2014 | வா.சா.ஆ.11 க்கு வாதி அனுப்பிய பதில் அறிவிப்பு | அலுவலக நகல் |

**<u>பிரதிவாதி தரப்பு சாட்சிகள் சான்றாவணங்கள்</u>**

இல்லை

T Anbu

Digitally signed by T Anbu
Date: 2026.07.21 19:01:54 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
துறையூர்.

Visit **ecourts.gov.in** for updates or download mobile app “**eCourts Services**” from Android or iOS